Tamilmanam International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed monthly academic research journal
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly · Peer-Reviewed · Open Access · Crossref · Google Scholar
SJIF Impact Factor3.5 · Multidisciplinary · International

Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

Vol. 12 No. 03 (2026): August 2026, **p228-237** | Available online at: www.tamilmanam.in

Original Research Paper

வைக்கம் முகம்மது பஷீர் சிறுகதைகளில் காணப்படும் உத்திகள்

Vaikom Mohammed Basheer Sirukathaigalil Kaanapadum Uthikal

வே. செந்தில் சிவ குமார்,

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,

திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம் - 517 426.

V. Senthil siva kumar*,

Part-time Research Scholar, Department of Tamil Language and Translation Studies,
Dravidian University, Kupam, 517 426. EMail: senthilsivakumar.v@gmail.com,
ORCiD: https://orcid.org/0009000295027339.

முனைவர் க. மாரியப்பன்

உதவிப்பேராசிரியர், தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,

திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம் - 517 426.

Dr. G. Mariappan,

Asst. Professor, Department of Tamil Language and Translation Studies,
Dravidian University, Kupam, 517 426. Email: gmariappan.du@gmail.com

Article history
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 01-08-2026

*Corresponding Author Email:
senthilsivakumar.v@gmail.com

Abstract: This study traces the evolution of Tamil literature from ancient Sangam poetry to modern genres like novels and short stories, highlighting the significant impact of translated works from neighboring Dravidian languages. Specifically, it focuses on the immensely popular Tamil translations of Malayalam author Vaikom Muhammad Basheer's short stories and novels, translated by Sukumaran and Kulachal Yusuf. Ultimately, the research aims to analyze the various literary techniques employed in Basheer's short stories, with a particular emphasis on how he crafts his titles, beginnings, narrative flow, and conclusions.

Keywords: *Tamil Literature, Vaikom Muhammad Basheer, Literary Translation, Literary Techniques, Short Story Analysis.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கிய உலகில் இலக்கியங்கள் காலந்தோறும் பல மாற்றங்களைச் சந்தித்து வருகின்றன. சங்ககாலத்தில் பாட்டும் தொகையும் என்றிருந்து பின்னாளில் காப்பியங்கள் என்ற பெருங்கதைகளாக வளர்ச்சி பெற்றன. மேலை நாட்டார் இலக்கியத் தொடர்பால் நாவல், சிறுகதை இலக்கியங்களாக இயற்றப்பட்டன. அவ்வகையில் நாவல், சிறுகதை வளர்ச்சியில் நம் அண்டை மாநிலங்களில் திராவிட மொழிக்குடும்பங்களின் ஆகச்சிறந்த நாவல், சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டன. மலையாள மொழியின் மிகச்சிறந்த படைப்பாசிரியரான வைக்கம் முகம்மது பஷீர் அவர்களின் சிறுகதைகள், நாவல்கள் மொழி பெயர்க்கப்பட்டன. தமிழகத்தில் வேறு எந்த மொழிபெயர்ப்பும்; இந்த அளவு கொண்டாடப்படவில்லை என்பது உண்மை. தமிழில் சுகுமாரன், குளச்சல் யூசுஃப் ஆகியோர் அவரது படைப்புகளை மொழிபெயர்ப்பு செய்து காலச்சுவடு பதிப்பகம் மூலம் வெளியிட்டுள்ளனர். பஷீர் அவர்களின் சிறுகதைகளில் வெளிப்படும் பல்வேறு உத்திகளில் தலைப்பு, தொடக்கம், போக்கு முடிவுகளை ஆய்வுசெய்வதாக உள்ளது

முன்னுரை:-

இலக்கியம் என்பது மனிதனின் நாகரிகம் மற்றும் பண்பாட்டின் நீட்சி ஆகும். தன் பசியை மறந்து கலை உள்ளத்துடன் இந்த உலகினைக் காணத்தலைப்பட்டதின் மறுதலையாக அமைகிறது இலக்கியம். இவ்வாய்வுக் கட்டுரைக்கு 2023 ஆம் ஆண்டில் ஆறாம் பதிப்பாக வெளியிடப்பட்ட காலச்சுவடு பதிப்பகத்தின் பஷீர் கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட 40 கதைகள் என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் பயன் படுத்தப்பட்டுள்ளது. பஷீர் அவர்களின் வாழ்வியல் அனுபவங்களைச் சிறுகதையில் பல்வேறு உத்திகள் மூலம் காட்டிய பாங்கினை மட்டுமே எடுத்தியம்புகிறது. இலக்கியத்தை வாழ்வியலைக் காட்டும் கண்ணாடி என்பர். அதற்கேற்ப தன் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்கள் என்று கூறிக்கொண்டே சில சிறுகதைகளை பஷீர் பொது வெளிக்குக் கொணர்ந்துள்ளார் . அவரது துணிச்சலான முடிவு அவரது நற்பெயரைப் பாதிக்கும் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையைக் கெடுக்கும் என்றெல்லாம் துளி கூட கவலைப்படாது மனதில் பட்ட வலிகளை, ரணங்களை இறக்கி வைத்திருக்கிறார். எளிய பேச்சுவழக்கினை எடுத்து கதைகளை உருவாக்குவதற்கே துணிச்சல் வேண்டும் அதிலும் பஷீர் அவர்களின் கால கட்டத்தில் இருந்த இலக்கண இலக்கிய பண்டிதத்தனத்தை மேதமைத்தனத்தை சம்மட்டியால் அடித்து உடைத்து கதைகளை எழுதியுள்ளது வெளிப்படை. இதை தமிழ் இலக்கிய உலகத்திற்கு கொண்டு வந்து எளிய பேச்சுவழக்கில் இலக்கியங்கள் இயற்றப்படலாம் என்பதை ஏற்றுக் கொள்ள வைத்த மொழிபெயர்ப்பாளர்கள் சுகுமாரன் அவர்களும், குளச்சல் யூசுஃப் அவர்களும் இலக்கிய உலகம் உள்ளவரைப் பாராட்டு பெறுவர்கள்.

DOI: https://doi.org/10.63300/tm12032026.19

இலக்கிய உத்திகள் அறிமுகம்:-

உத்தி என்ற சொல் தொல்காப்பியர் காலம் முதலே தமிழில் பயன்படுத்தப்பட்டது. "ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்" (மரபியல் 110 தொல்) எனத்தொடங்குகிறது. இந் நூற்பாவில் உத்தி என்ற சொல் மட்டுமல்ல முப்பத்திரண்டு உத்திகள் பட்டியலாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. இவை நூல் வகைமைகளுக்கான உத்திகளாகக் கருதப்பட்டன. பிற்கால இலக்கிய வகைமையான சிறுகதை, நாவல், கவிதைகளிலும் இவ்வுத்திகள் புகுத்திப் பார்க்கப்பட்டமையால் ஆய்வுலகம் விரிவடைந்துள்ளது. உத்திகளின் வகை, தொகை, நிலை காலந்தோறும் மாறிக்கொண்டிருக்கும் என்பது வெளிப்படையான உண்மையே. "உத்திகளின் வகையும் தொகையும், நிலையும் காலந்தோறும் மாறுபடுவது. படைப்போருக்கேற்ப வேறுபடுவது, பாடு பொருளுக்கேற்பவும், பாடல்களுக்கேற்பவும், பாடலின் நோக்கம், பயன் அமைப்பு போன்ற பிற பலவற்றிற்கேற்பவும் விதம் விதமாக அமையக்கூடியது"[1] என்கிறார் ச.வே.சுப்பிரமணியன் அவர்கள். மேலும் இதே நூலில் "தொல்காப்பிய மரபியல், நூலுக்கு மட்டுமன்றி, எல்லா இலக்கியத்திற்கும் உரிய சொல் மரபுகளும் பிறவும் கூறுவதால், இவ்வுத்திகளையும் இலக்கண வரைவினின்று நீக்கி இலக்கியத்திற்கும் கொள்ளக்கூடும் அன்றியும் இலக்கியப் பொருள், வடிவம், வெளியீடு பற்றிய கோட்பாடுகள் பலவற்றை வகுத்தளிக்கும் தொல்காப்பியம் உத்தி என்ற சொல்லின்றியும் உத்திவகைகள் சிலவற்றை வழங்குகின்றது. அக, புறப்பொருண்மைகள் வெளிப்படும் முறைகள், முதற் கரு உரிநிலைகள், திணை மலர்க்குறியீடுகள், பாத்திரக்கூற்று, உள்ளுறை, இறைச்சி, உவமை, நாடக மெய்ப்பாடு, குறிப்புரை, பேசாதனவும் கேட்காதனவும் பேசுவதாகவும் கேட்பதாகவும், கற்பனையாக அமைத்தல் நிரனிறை முதலிய மொழிபுணர் இயல்பு, செய்யுள் வடிவம், நோக்கு, எச்சம் முன்னம், மாட்டு, வண்ணம், சொற்பொருள், மரபு என விரியும்" [2] என்றும் விவரிக்கிறார்.

தமிழில் சிறுகதை இலக்கியத் தோற்றம்:-

தமிழ் உரைநடை இலக்கியங்கள் செல்வாக்கு பெற்ற காலத்தில் வீரமாமுனிவரின் பரமார்த்த குரு கதைகள் சிறுகதை வடிவமைப்பில் மக்கள் பேச்சுவழக்கில் வெளிவந்தது. இதனைப் பண்டித மமதையில் எதிர்ப்போர் எதிர்க்க பாமர மக்கள் துணிந்து ஏற்றனர். பின் வ.வே.சு ஐயர் அவர்களின் மங்கையர்க்கரசியின் காதல், குளத்தங்கரை அரசமரம் போன்ற சிறுகதைகள் நிகழ்வுகளை சுருக்கமாகவோ விவரிப்பாகவோ கூறத்துணிந்தன. "சிறுகதை என்ற இந்தப் புதிய இலக்கிய வகையை வ.வே.சு ஐயர் தமிழர்க்கு அறிமுகப்படுத்துவதற்கு முன் இருந்த பலவகைச் சின்ன கதைகள் சிறுகதைகள் அல்ல, அளவிலே சிறியனவாக இருந்த கதைகளே. அவை ஒருவன் அல்லது ஒருத்தி பிறந்தது முதல் செய்த செயல்களை ல்லாம் முறையாகச் சொல்லி, மங்கலமான முடிவைச் சொல்ல, வாழ்க்கை வரலாறு போல்

அமைந்தவை. எங்கேனும் தொடங்கி ஒரு நிகழ்ச்சி அல்லது ஒருவர் பண்பு அல்லது ஒரு கருத்து அல்லது ஓர் உணர்ச்சி என்று ஏதேனும் முடிபு அந்தப் பழங்கதைகளில் இல்லை. ஐரோப்பிய மொழிகளில் அவ்வாறு ஒரு கல் பதித்து ஒளி வீசும் பதக்கம் போல் விளங்கிய சிறுகதை என்னும் இலக்கிய வடிவைப் போற்றித் தமிழில் இயற்றும் முயற்சி இந்நூற்றாண்டில் வளர்ந்ததே ஆகும்" [3] என்கிறார் திரு. மு. வரதராசன் அவர்கள்.

சிறுகதைகளின் செல்வாக்கு:-

எளிமையான இலக்கியமான சிறுகதையை பத்தொன்பதாம் நூற்றாண்டில் வளர்த்தெடுத்த பங்கு பாரதி முதல் தற்கால எழுத்தாளர்கள் வரையுண்டு. சுதேசமித்திரன், மணிக்கொடி இதழ்கள் பல நவீன சிறுகதை எழுத்தாளர்கள் வளர உதவியது. அதில் எழுதிய புதுமைப்பித்தன் சிறுகதை மன்னன் என்ற பெயர்பெற்றார். பின் வந்த எழுத்தாளர்களான இராஜாஜி, கு.ப.ரா, பி.எஸ். ராமையா, கல்கி, மௌனி, ந.பிச்சமூர்த்தி, தி. ஜானகிராமன், சிதம்பரசுப்பிரமணியன், லா.சா.ராமாமிருதம், சி.சு.செல்லப்பா, சுந்தரராமசாமி, கு. அழகிரிசாமி, விந்தன், அறிஞர் அண்ணா, ஜெயகாந்தன், பிரபஞ்சன், கந்தர்வன், எஸ். இராமகிருஷ்ணன் என இன்று வரை வளர்ச்சிப்பாதையில் செல்கிறது.

மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்:-

மராத்தி மொழியில் மிகச்சிறந்த சிறுகதை எழுத்தாளர் ஆன காண்டேகரின் கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தவர் கா.ஸ்ரீ.ஸ்ரீ. கன்னடத்தில் காரந்த் என்பவரின் 'மரளிமண்ணிகே' சித்தலிங்கய்யாவால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மலையாளத்தில் வைக்கம் முகம்மது பஷீர் அவர்களின் நாவல்களையும், சிறுகதைகளையும் சுகுமாரன், குளச்சல் யூசுஃப் மொழிபெயர்த்துள்ளனர். இன்று இணைய வளர்ச்சியின் காரணமாகவும் உலகமெல்லாம் பரவியுள்ள தமிழ் மக்களின் தமிழ் ஆர்வம் காரணமாக உலகமொழிகள் அத்தனையிலும் உள்ள சிறுகதைகள் பொருள், வடிவத்துடன் மொழிபெயர்க்கப்படுவது சிறப்பு. இதனால் இன்னும் வருங்காலங்களில் சிறுகதை மேலும் தரமான வளர்ச்சி பெறும் என்பது உண்மை.

வைக்கம் முகம்மது பஷீர் வாழ்க்கை வரலாறு:-

பஷீர் கேரளத்தின் இன்றைய கோட்டயம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஆங்கிலேயரின் காலத்தில் திpருவிதாங்கூர் சமஸ்தானத்திற்குட்பட்ட வைக்கம் என்ற ஊரின் அருகில் உள்ள "தலையோலைப்பறம்பில்" பிறந்தார். அவரது பிறப்பு சுதந்திரத்துக்கு முந்தைய காலமான 1908 ஜனவரி 21 ஆம் தேதி ஆகும். அவரின் தந்தை 'கண்ணீத்ர வைப்பெல் காயி அப்து ரஹிமான், தாய் பாலசேரி குஞ்ஞுதாச்சும்மா. குடும்பத்தில் தலைப்பிள்ளையாகப் பிறந்த பஷீர் அவர்களைச் சேர்த்து மொத்தம் ஆறு குழந்தைகள். பஷீர், அப்துல் காதர், ஹனிபா, அபுபக்கர் என்ற மூன்று தம்பிகளையும், பாத்தும்மா, குஞ்ஞானும்மா என்ற தங்கைகளையும்

உடன்பிறப்பாகக் கொண்டவர். இவர் கதைகளில் அவரது குடும்ப உறுப்பினர்களும் இடம் பெறுவதை உத்தியாக்கியுள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 40 கதைகள் நூலில் பஷீரின் சிறுகதைகள்:-

1. ஜென்ம தினம் 2. ஐசுக்குட்டி 3. டைகர் 4. கள்ள நோட்டு 5. செகண்ட் ஹாண்ட் 6. ஒரு சிறைப்பறவையின் புகைப்படம் 7. மனைவியின் காதலன் 8. அம்மா 9. போலீஸ்காரனின் மகள் 10. அபூர்வ தருணங்கள் 11. புனிதரோமம் 12. பூ நிலவில் 13. அனல் ஹக் 14. மூடர்களின் சொர்க்கம் 15. பூவன் பழம் 16 நிலவைக் காணும்போது 17. முதல் முத்தம் 18. கால்சுவடு 19. ஆளரவமற்ற வீடு 20. நீலவெளிச்சம் 21. போலீஸ்காரனின் மகன் 22. ஏழைகளின் விலைமாது 23. இடியன் பணிக்கர் 24. வளையிட்ட கை 25. உலகப்புகழ் பெற்ற மூக்கு 26.. தங்கம் 27. ஒரு பகவத்கீதையும் சில முலைகளும் 28. எட்டுக்காலி மம்மூஞ்து 29. ரேடியோகிராம் என்னும் ரதம் 30. பர்ர்ர்…..31. ஆனை முடி 32. எனது நைலான் குடை 33. ஒரு கணவனும் மனைவியும் 34. சிரிக்கும் மரப்பாச்சி 35. நூறுரூபாய் நோட்டு 36. மனைவியைத் திருடிச்செல்ல ஆள் தேவை 37. பூமியின் வாரிசுதாரர்கள் 38. நோட்டு இரட்டிப்புத் 39. தங்க மாலை 40. சிங்கிடி முங்கன்

பஷீரின் கதை கூறும் உத்தி முறைகள்:-

பஷீர் அவர்களின் சிறுகதைத் தலைப்புகள், தொடக்கம், முடிவுகளை ஆய்வு செய்வதாக அமைவதால் கதைத்தலைப்புகளில் உள்ள உத்திகள், கதைத் தொடக்கத்தில் உள்ள உத்திகள், கதை முடிவுகளில் கையாளும் உத்திகள் ஆகியவற்றை விளக்குவதாக உள்ளது.

கதைத்தலைப்புகள்:-

கதாபாத்திரங்களின் பெயர் தலைப்பாதல் – ஐசுக்குட்டி, டைகர், அம்மா, மனைவியின் காதலன், இடியன் பணிக்கர், தங்கம், எட்டுக்காலி மம்மூஞ்து, சிங்கிடி முங்கன் என்ற தலைப்புகளில் கதைக்குள் முக்கியமாகப் பேசப்படும் பாத்திரங்களைக் காணலாம்.

கதாபாத்திரங்களின் பண்புத் தலைப்பாதல் -- செகண்ட் ஹாண்ட், புனித ரோமம், ஆளரவமற்ற வீடு, நீலவெளிச்சம், சிரிக்கும் மரப்பாச்சி இக்கதைகள் பெரும்பாலும் பாத்திரங்களின் பண்பினை விளக்கும்.

சம்பவங்கள் அடிப்படையிலான தலைப்புகள் – ஜென்மதினம், ஒரு சிறைப்பறவையின் புகைப்படம், அபூர்வ தருணங்கள், நிலவைக்காணும்போது, முதல் முத்தம், ஆளரவமற்ற வீடு, மனைவியைத் திருடிச்செல்ல ஆள் தேவை, நோட்டு இரட்டிப்பு, இத்தலைப்புகள் சிறுகதைக்குள் வரும் சம்பவங்கள் அடிப்படையில் வைக்கப்பட்டுள்ளன.

DOI: https://doi.org/10.63300/tm12032026.19

கருப்பொருள் அடிப்படையாலான தலைப்புகள் – கள்ளநோட்டு, அனல் ஹக், முட்டாள்களின் சொர்க்கம், பூ நிலவில், கால்சுவடு, ஒரு பகவத்கீதையும் சில முலைகளும், ஆனைமுடி, எனது நைலான் குடை, தங்க மாலை கருப்பொருள் அடிப்படையில் வைக்கப்பட்டுள்ளன.

விந்தையான தலைப்புகள் -- போலீஸ்காரனின் மகள், பூவன் பழம், நிலவைக்காணும் போது, போலீஸ்காரனின் மகன், ஏழைகளின் விலைமாது, உலகப்புகழ் பெற்ற மூக்கு, ரேடியோ கிராம் என்னும் ரதம் இங்கு விந்தையான தலைப்பு என்பது வாசகனைக் குழப்ப அவர் வைத்துள்ள தலைப்பாகக் கருதலாம்.

கதைத்தொடக்கம்:-

கதையின் அறிமுகத் தொடக்கம் -- ஜென்மதினம் கதையின் தொடக்கத்திலேயே **"மகர மாதம் 8 ஆம் தேதி. இன்று எனது பிறந்த நாள்"** [4] என்று தலைப்பு வைத்ததன் நோக்கம் வெளிப்படுகிறது. டைகர் என்ற நாய் முக்கியப்பாத்திரம் எனவே **"டைகர் அதிர்ஷ்டம் செய்த நாய்"** [5] என்று தொடங்குகிறார். அனல் ஹக் கதையின் தொடக்கமே **"அனல்ஹக் என்று இயல்பாகச் சொல்லித் திரிந்த மன்சூர் அல் ஹல்லலாஜை அரசாங்கமும் மதப்பண்டிதர்களும் சேர்ந்து கொன்று, துண்டு துண்டுகளாக வெட்டி, எரியூட்டி யூஃப்ரடீஸ் நதியில் கரைத்த போது...."** [6] என்று தொடங்குகிறார்.

கதை நிகழ்வுத் தொடக்கம் -- பஷீர் சில கதைகளில் நேரடியாக தன் வாழ்வில் நடந்த சம்பவங்களைக் கூறுகிறார். **"பூவன்பழம் என்ற இந்தக் கதையை நான் சுய விருப்பத்துடன் எழுதவில்லை. அப்துல்காதர் சாகிபின் உபத்திரவம் தாங்க முடியாமலல்தான் எழுதுகிறேன்"** [7] இது பூவன் பழம் கதையின் தொடக்கமாகும்.

"கால்சுவடு என்னும் இந்தக்கதை, சில வருடங்களுக்கு முன் இரவு நேரத்தில், ஒரு இலக்கிய வாதி தங்கியிருந்த அறைக்கு வந்த ஒரு இயக்கவாதி சொன்னது" [8] என்று தன் வாழ்நாளில் நடந்த நிகழ்வைக் கூறுவது போல் தொடங்குகிறார்.

கதாபாத்திரங்களின் உரையாடல் தொடக்கம் -- "அருமைக் குழந்தைகளே ஒரு கதை சொல்லப்போகிறேன், கேளுங்கள்" [9]என்று தங்கம் கதையை ஆரம்பிக்கிறார்.

ஒரு நாள் எனது இல்லாளை அழைத்துச் சொன்னேன்: **"எடியே, திடீர்னு ஒரு நாள் நான் இறந்து போனேன்னு வச்சிக்க உனக்கும் உன்னோட தோழிமாருக்கும் கொஞ்சம் பாட்டு கேட்கணும் போலிருந்தா என்னடீ பண்ணுவ"**[10] என்று ரேடியோகிராம் என்னும் ரதம் கதையைத் தொடங்குகிறார்.

ஆசிரியரின் வருணனைத் தொடக்கம் -- "டைகர் அதிர்ஷ்டம் செய்த நாய். நாடு முழுவதும் பஞ்சம் வந்து, மக்கள் எலும்பும் தோலுமான நிலையிலும் டைகரிடம் எந்த வாட்டமுமில்லை. அது உட்பார்ந்திருக்கும் தினுசைப் பார்த்தால் வீங்கிப் பருத்த கருங்கட்டைப் போல்

தோன்றும். கால்களும் வாலும் வெளுப்பு. கண்கள் சிவப்பு கலந்த தவிட்டு நிறம், போலீஸ்காரனின் கண்களைப் போல் துளைத்தெடுக்கும் பார்வை"[11]என்று நாயைப் பற்றிய வர்ணனையுடன் டைகர் சிறுகதை தொடங்குகிறது.

ஒரு சிறைப்பறவையின் புகைப்படம் என்ற சிறுகதையில் **"நடுவில், பல வர்ணக்கலவையில் யேசுநாதரின் படம். இருபுறமும் இரண்டு சாதாரண புகைப்படங்கள். ஒன்றில் சோர்ந்த முகத்துடன் ஒரு நடுத்தரவ வயதினர். மற்றொன்றில் அடர்ந்து, சுருண்ட தலைமுடியும் புன்னகை தவழும் பெரிய கண்களும்... இளமைத் துடிப்புமாக அழகான ஓர் இளைஞன் "** [12] என்று தொடங்குகிறார்.

பூ நிலவில் என்ற சிறுகதையில் **"**அழகிய நிலவொன்றில் ஒரு பெண்ணின் உடல்கூடு உடைந்து கலக்கும் பரிதாபமான காட்சி. இதை இடித்து தகர்ந்த புராதன நகரின் சிதிலங்களில் வைத்துக் கண்ட நான் கீழே விழுந்தேன் **"** [13] என்று தொடங்குகிறார்.

கதை முடிவு :- சிறுகதையின் தொடக்கம் போலவே முடிவும் வித்தியாசமாக அமைவதாகவே பஷீர் முடிக்கிறார். அவரது 40 கதைகளிலும் அடிக்கடி மங்களம், சுபம் போன்ற நற்சொற்களை அமைக்கிறார். சிறுகதையைப் படித்து முடிக்கும் வாசகனுக்கு கதை குழப்பமில்லா கருத்தினை வெளிப்படுத்தும் விதத்தில் முடிக்கிறார். பஷீர் சிறுகதைககளின் முடிவினை இன்பியல் முடிவு, துன்பியல் முடிவு என இருவகைகளில் அடக்கி இவ்வாய்வு அமைக்கப்பட்டுள்ளது. **"**கதையின் முடிவை அமைப்பது தான் மிகச் சிரமமான வேலை**"** [14]என்பார் ஜார்ஜ் எலியட் இக்கூற்றினை பஷீர் படித்திருப்பாரா? என்ற கேள்வி நமக்குள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. கதையின் போக்கில் நம்மை கட்டிப்போடும் பஷீர் முடிவில் நம்மைப் பாராட்ட வைக்கிறார்.

'ஜென்மதினம்' கதையின் இறுதியில் எழுத்தாளர்கள் படும் பசித்துயரத்தைக் காட்டியிருப்பார். தன் பிறந்தநாள் அன்று விருந்துக்கு அழைத்ததை மறந்து சினிமாவுக்குச் சென்று விட்ட வீட்டு உரிமையாளருக்குத் தெரியாமல் உணவை பஷீர் சாப்பிட்டு விடுகிறார். இதை அறியாமல் வீட்டு உரிமையாளர் "ஐ ஸே சினிமாவுக்குப் போயிருந்தோம். விக்டர்ஹ்யூகோவின் "பாவங்கள்" நீங்க பார்க்க வேண்டிய ஒரு ஃபர்ஸ்ட் கிளாஸ் ஃபில்ம்"
ஓஹோ..." பஷீரின் பதில் .... வீட்டு உரிமையாளர் " நீங்க சாப்டீங்களா? எனக்குப் பசிக்கலெ. சோறு வேஸ்டாயிடும். வந்து சாப்பிடுங்களேன். வர்ற வழியில் நாங்க மார்டன் ஹோட்டல்லெ ஏறினோம்." என்கிறார். **"**தாங்க்ஸ். நான் சாப்பிட்டாச்சு". பஷீரின் பதில்.
அப்படியா? சரி தூங்குங்க, குட்நைட்". **"**எஸ். குட்நைட்" பஷீர் பதிலுடன் முடிக்கிறார் சிறுகதையை. மனதில் உள்ள சுயமரியாதை அவர் பதில்களில் அமைதியாகவும் படிக்கும் வாசகன் மனதில் ஆரவாரத்துடன் எட்டிப்பார்க்கிறது.

DOI: https://doi.org/10.63300/tm12032026.19

இன்பியல் முடிவு	துன்பியல் முடிவு
ஐசுக்குட்டி----சுகப்பிரசவம்	ஜென்மதினம் - பசிக் கொடுமை
செகண்ட் ஹாண்ட் - தலைவன் தலைவி இணைவு	டைகர் --கைதியைத் துன்புறுத்தல்
அம்;மா – தன் வாழ்க்கைச் சம்பவம் தாயின் பாசவெளிப்பாடு	கள்ளநோட்டு – அபலைப் பெண் பலி
போலீஸ்காரனின் மகள் - போராளியின் நிறைவேறும் காதல்	ஒரு சிறைப்பறவையின் புகைப்படம் - ஒரு தலைக்காதல்
பூ நிலவில் -- நினைவில் வந்து உறவாடும் பெண்	மனைவியின் காதலன் - சந்தேகம் கொண்ட கணவன்
பூவன்பழம் - நகைச்சுவையான முடிவு	புனித ரோமம் - மக்களின் நம்பிக்கைகளை ஆராய வேண்டாம்
முதல் முத்தம் - எழுத்தாளர் ஆக ஒரு பெண்ணுக்குக் கொடுத்த முதல் முத்தம்	அபூர்வ தருணங்கள் - மனதிற்குப் பிடித்த ஓர் உறவைப் பிரிதல்
நீல வெளிச்சம் -- அமானுஷ்ய சக்தியுடன் உறவு	அனல் ஹக் - நதி நீர் இரத்தசிவப்பானதற்குரிய காரணம்
உலகப் புகழ் பெற்ற மூக்கு – அரசியல் நையாண்டி	மூடர்களின் சொர்க்கம் - விலைமாதுவின் வறுமை
தங்கம் -- இணைந்த இரு இதயங்கள்	நிலவைக் காணும் போது – கடற்கரை அருகே ஒரு பெண்ணின் நினைவுகளோடு
எட்டுக்காலி மம்மூஞ்ஞு}—எளிய மனிதனின் கதை	கால் சுவடு -- இயக்கங்களில் நடக்கும் துரோகங்கள்
ஆனைமுடி – யானையின் முடியைப் பெற நடத்தும் போராட்டம்	ஆளரவமற்ற வீடு – யாருமில்லாத ஓவியன் இறப்பு
பர்ர்ர்….! -- சிறுவயதில் கண்ட தோழியிடம் நினைவுப் பகிர்வு	போலீஸ்காரனின் மகன் - கொடூரனான ஒரு போலீஸ்காரனின் மகன்
எனது நைலான் குடை – விலையுயர்ந்த குடை கிழிந்த கதை	வளையிட்ட கை – இலக்கிய வாதியின் ஏமாற்று மனைவி

DOI: https://doi.org/10.63300/tm12032026.19

ஒரு கணவனும் மனைவியும் - பெருமைக்காக வேலைக்கு ஆள் வைத்துக் கொள்வத நையாண்டி செய்தல்	ஏழைகளின் விலைமாது – வறுமையால் விலை மாது ஆன பெண்
சிரிக்கும் மரப்பாச்சி – எதிரபாராமல் கிடைத்த மரப்பொம்மைக்குள் இருந்த இரத்தினக்கல் வாழ்க்கை மாற்றம்.	இடியன் பணிக்கர் -- குரூரமான ஒரு போலீஸ் அதிகாரியின் மரணம்
பூமியின் வாரிசுதாரர்கள் -- பூமியில் பிறந்த அனைத்து உயிர்களுக்கும் வாழ உரிமை உண்டு	ஒரு பகவத் கீதையும் சில முலைகளும் -- சமயங்களின் பெயர் சொல்லி நடக்கும் அக்கிரமங்கள்
நோட்டு இரட்டிப்பு – துறவறம் பூண்டு நல்வாழ்வு வாழ நினைத்தால் தந்திரங்கள் தேவை என்ற கருத்து.	ரேடியோ கிராம் என்னும் ரதம் -- உடைமைகளைப் பாதுகாத்தல்.
சிங்கிடி முங்கன் -- எள்ளல் சுவையுடன் புதிய மதங்கள் தோன்றுதலை விவரிக்கிறது.	நூறு ரூபாய் நோட்டு – கள்ளநோட்டாகத் கிடைத்ததை எரித்தல்
	மனைவியைத் திருடிச்செல்ல ஆள் தேவை – சபல எண்ணத்தால் ஒரு ஆண் செய்யும் விளம்பரம்
	தங்க மாலை – உடல் நலக்குறைபாடு வந்தால் கையிலிருந்கும் தங்க நகைக் காணாமல் போய்விடும்.

ஆய்வு முடிவுகள்:-

பஷீர் அவர்களின் சிறுகதைகளின் தலைப்பு, தொடக்கம், முடிவு என்பதிலேயே சிறுகதைப் போக்கினை அறிய முடிகிறது. எளிய வடிவம் பஷீர் அவர்களுக்கு கைவரப்பெற்றதற்குக் காரணம் ஒவ்வொரு தனிமனித வாழ்க்கையிலும் அவர் பெற்ற அனுபவத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் பெற்றிருப்பதே. இதை படிக்கும் வாசகனுக்குக் கொண்டு சேர்க்க மொழிபெயர்ப்பாளர்களின் பணியும் உயிர்நாடியாக அமைவதை அறிய முடிகிறது. மூல மொழியின் உயிர்த்துடிப்பினை மொழிபெயர்ப்பளரும் உணர்ந்து வாசகரும் உணர்ந்து மிகப்பெரிய வெற்றியைப் பெறமுடியும் என்பது நிரூபனமாகியுள்ளது. இவ்வாய்வில் சிறுகதைகளின் முடிவாகத் தெரிவதை ஆய்வாளர் இரண்டு உணர்வுகளுக்குள்

வகைப்படுத்தியிருப்பது உய்த்தறிதலாலே அன்றி வேறு உள்நோக்கம் கிடையாது. பஷீர் எளிய மனிதர் என்பதற்கு படைப்புகளில் கையாண்டுள்ள இந்த முடிவுகளை விடவும் சான்று கிடையாது. உத்திகள் என்பதை பஷீர் தெரிந்து புரிந்து பயன்படுத்தியதைவிட அவர் கற்றறிந்த பெற்றுணர்ந்த அனுபவம் தானாக உத்திகளை படைப்புகளில் புகுத்தியிருக்கலாம் என்பதே இவ்வாய்வுக்கட்டுரையின் முடிவாகும்.

அடிக்குறிப்புகள்.

[1.] ச.வே. சுப்பிரமணியன். இளங்கோவின் இலக்கிய உத்திகள். ப. 6.
[2.] மேலது.. ப. 7
[3.] மு. வரதராசன். தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி
[4.] வெளியீடு ப.330
[5.] பஷீர் கதைகள் . ப. 29
[6.] மேலது . ப. 57
[7.] மேலது . ப. 155
[8.] மேலது. ப. 172
[9.] மேலது. ப. 208
[10.] மேலது. ப. 271
[11.] மேலது. ப. 307
[12.] மேலது. ப. 57
[13.] மேலது. ப. 84
[14.] மேலது. ப. 145
[15.] கி.வா.ஜகந்நாதன்., தமிழ்நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 34